யூதாஸ் அருளிச்செய்த சுவிசேஷம்

ரேடோல்ப் கேசர், மர்வின் மேயர், க்ரேகர் வுஸ்ட், ஆகியோரால் பிரான்க்கோ கோதாட் என்பவருடன் இணைந்து மொழிபெயர்க்கப்பட்டது.

தோற்றுவாய், இங்கு தொடங்குகிறது.

பஸ்கா பண்டிகையின் கொண்டாட்டத்திற்கு மூன்று தினங்களுக்கு முந்திய வாரம் ஒன்றில், இயேசுவானவர், யூதாஸ் கரியேத்துக்கு ரகஸ்யார்த்தமாக பேசி வெளிப்படுத்தின காரியங்கள்.

இயேசுவின் துவக்க கால ஊழியம்:

இயேசுவானவர், பூமியில் தோன்றிய போது, அவர் அற்புதங்கள் செய்து, மனுஷ குலத்துக்கு பெரும் அற்புதமான இரட்சிப்பை நிகழ்த்தினார். பின்னும், சிலர் நீதியின் பாதையில் நடந்தும், சிலர் மீறுதல்களின் பாதையில் சென்றதால், பன்னிரு சீஷர்கள் அழைக்கப்பட்டனர். இந்த உலகிற்கு அப்பாற்பட்ட புலனாக விஷயங்களைக்குறித்தும், இறுதியில் என்ன நிகழும் என்பதைக்குறித்தும் அவர் பேச ஆரம்பித்தார். அவர், தன்னியல்பாக அவர்கள் மத்தியில் நடந்து கொள்ளாமல், ஒரு குழந்தையைப்போல நடந்து கொண்டார்.

காட்சி 1 :

இயேசுவுக்கும், அவரது சீஷர்களுக்கு இடையே நடந்த உரையாடல். ஸ்தோத்திர பலி அல்லது திவ்விய நற்கருணை.

ஒரு நாள், அவர் யூதேயாவில் தனது சீஷர்களுடன் இருந்தார். அவர்கள் ஒன்றாய் திரண்டு, பயபக்தியோடு அமர்ந்திருந்தார்கள். அவர், தன்னுடைய சீஷர்களை அணுகியபோது, அவர்கள், ஒருமித்து அமர்ந்து, அப்பத்திற்காக ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்ததைப்பார்த்து விட்டு, சிரித்தார்.

சீஷர்கள், அவரிடம்," எஜமானே, எங்கள் ஸ்தோத்திர பலியைக்குறித்து நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்? நாங்கள் எது சரியோ, அதைத்தானே செய்திருக்கிறோம்?" என்றனர்.

அவர், அவர்களிடம்," நான் உங்களைப்பார்த்து சிரிக்கவில்லை. நீங்கள், உங்கள் சித்தத்தின் படி இதைச்செய்யவில்லை. ஆனால், இதன் மூலமாய், உங்கள் கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவார்" என்று பதிலளித்தார்.

அவர்கள், "எஜமானே, தேவரீர், கர்த்தருடைய குமாரன்" என்று என்றனர். இயேசு அவர்களிடம்," நீங்கள் எவ்வாறு என்னை அறிவீர்கள்? உங்கள் சந்ததியில் உள்ள ஜனங்கள் என்னை அறிந்து கொள்ள மாட்டார்கள் என மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்."

சீஷர்கள் கோபம் கொண்டனர்.

அவரது சீஷர்கள் இதைக்கேட்டதும், அவர்கள் கோபம் கொள்ள ஆரம்பித்து, ஆவேசம் கொண்டு, அவருக்கு எதிராக, தங்கள் இருதயங்களில் தேவதூஷணம் செய்தனர்.

அவர்களது புரிந்து கொள்ளாத தன்மையைக்கண்ட இயேசுவானவர், அவர்களிடம், "ஏன் இந்த ஆவேசம் உங்களைக்கோபத்திற்கு தூண்டியது? உங்களுக்குள் இருக்கிற தேவன் [...] [35] [உங்களுக்குள்] இருக்கிற ஆத்துமாவை கோபத்திற்கு தூண்டியுள்ளார். மனுஷருக்குள்ளே, உங்களுக்குள் [வலிமையுள்ளவர்] உத்தமமான ஒரு மனுஷனை கொண்டு வந்து என் கண் முன்னே நிறுத்தட்டும்" என்றார்.

அவர்கள் எல்லாரும்," எங்களுக்கு பெலம் உண்டு " என்றார்கள்.

ஆனால், யூதாஸ் கரியேத்தைத்தவிர அவர்களது ஆவிகள் [அவர்] முன்னே நிற்க தைரியமில்லாது இருந்தது. அவன், அவர் முன்னே நிற்க இயன்றவனாய் இருந்தான்.

யூதாஸ் அவரிடம்," நீர் யாரென்றும், நீர் எங்கிருந்து வருகிறீரென்றும் நான் அறிவேன் ” என்றான். பார்பேலோ என்ற, நித்தியமான ராஜ்ஜியத்தில், பிரபஞ்சத்தின் ஆதியிலிருந்து, தேவரீர் இருந்து வருகிறீர். உம்மை அனுப்பி வைத்தவரின் பெயரை உச்சரிக்கக்கூட அடியேன் பாத்திரனல்ல.

இயேசு, யூதாஸிடம் ரகசியமாக பேசுகிறார்.

2

யூதாஸ், உயர்ந்த காரியங்களைக்குறித்து சிந்திக்கிறான் என்று அறிந்த இயேசு, அவனிடம், "மற்றவர்களை விட்டு விலகி வா; ராஜ்ஜியத்தின் மறைவான காரியங்களைக்குறித்து நான் உனக்குச்சொல்லுவேன்," என்றார். உனக்கு அடைவதற்கு சாத்தியமே என்றாலும், அது உனக்கு பெரிதும் பாடுகளைத்தரும் என்றார். உனக்குப்பதிலாக வேறொருவர் பதிலியாக வந்து, அதன் மூலமாய் பன்னிரு சீஷர்கள், மீண்டும் தேவனிடத்தில் சம்பூரணமடைவார்கள்.

யூதாஸ் அவரிடம், " இந்தக்காரியங்களைக்குறித்து தேவரீர் எப்போது என்னிடம் விளம்புவீர்; மேலும் தலைமுறைக்கென்று, புதிய வெளிச்சமானது பெருநாளில் [என்று] விடியும்?" என்றான்.

ஆனால், அவன் இதைச்சொன்னதும், இயேசு அவனை விட்டு அகன்று போனார்.

காட்சி 2 :

இயேசு, தனது சீஷர்கள் மத்தியில் மறுபடி தோன்றுதல்

இது நிகழ்ந்த பின்பு, இயேசுவானவர் தனது சீஷர்கள் மத்தியில் மீண்டும் தோன்றினார். அவர்கள், அவரிடம், "எஜமானே, தேவரீர் எங்கே சென்றீர்; எங்களை விட்டுப்பிரிந்த பின்பு என்ன செய்தீர்?" என்றார்கள்.

இயேசு அவர்களிடம், "நான் இன்னொரு மாபெரும் புனித தலைமுறையிடத்துச்சென்றேன்" என்றார். அவரது சீஷர்கள் அவரிடத்து, "கர்த்தாவே, எங்களைக்காட்டிலும் மேலானதும், புனிதமானதும், இந்த உலகில் இல்லாதாததுமான அந்த மாபெரும் தலைமுறை எது?" என்றார்கள்.

இயேசு, இதைக்கேட்டதும் சிரித்து விட்டு, " நீங்கள் ஏன் பெலமும், புனிதமும் கொண்ட தலைமுறையைக்குறித்து உங்கள் இருதயங்களுக்குள் சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்றார். [37]. இந்த யுகத்தில் பிறந்த ஒருவனும், அந்தத்தலைமுறையைக்காணப்போவதில்லை என்றும், நட்சத்திரங்களின் தேவர்களின் கூட்டம் ஒரு போதும் அந்தத்தலைமுறையின் மேல் ராஜரீகம் செய்யப்போவதில்லை என்றும், மனுஷனாய்ப்பிறந்த ஒருவனும் அதனோடு தன்னைத்தொடர்பு படுத்திக்கொள்ள முடியாது என்றும், அந்த தலைமுறை அதிலிருந்து....[...]...வரவில்லை என்பதால், அது மாறியுள்ளது... [...] என்றும் மெய்யாகவே [நான்] உங்களுக்குச்சொல்லுகிறேன்.

[உங்கள்] மத்தியில் இருக்கிற தலைமுறை ஜனங்கள், வல்லமை, மனுக்குலத்தின் தலைமுறை..[...] நீங்கள் [எதன்படி] ஆளுகிறீர்களோ...எந்த...[ஆக] மற்ற வல்லமைகளை [...]... " அவரது சீஷர்கள் இதைக்கேட்டதும், அவரது சீஷர்கள் ஒவ்வொருவரும், ஆவியில் இடறலடைந்தார்கள்.

மற்றொரு நாள், இயேசு, [அவர்களிடம்] வந்தார். அவர்கள், [அவரிடம்], "எஜமானே நாங்கள், இராவிலே பெரும் [கனவுகளைக்கண்டோம், அதில் உம்மை [தரிசனத்தில்] கண்டோம்...[...] " என்றார்கள். [அவர் சொன்னார்], "[நீங்கள்] ஏன் ஒளிந்து கொண்டீர்கள்?" [38]

சீஷர்கள் தேவாலயத்தைக்கண்டு அது குறித்து உரையாடுகிறார்கள். அவர்கள் [சொன்னார்கள்], "ஒரு பெரிய பலிபீடத்துடன் இருந்த மிகப்பெரிய வீட்டை நாங்கள் கண்டோம். -- [அதனுள்] பன்னிருவர் இருந்தனர். அவர்கள் ஆசாரியர்கள் என்று நாங்கள் சொல்லலாம். ...--அத்துடன் ஒரு பெயர்; [ஆசாரியர்கள் வரும் வரை] ஒரு ஜனக்கூட்டம் அங்கு பலிபீடத்தில் காத்திருந்தனர். [ஆனால்] நாங்கள் காத்திருந்தோம். [இயேசு சொன்னார்], "அந்த ஆசாரியர்கள் எப்படி இருந்தார்கள்?" அவர்கள் [சொன்னார்கள் சிலர்]....இரண்டு வாரங்கள்; [சிலர்] தங்கள் சொந்தப்பிள்ளைகளை பலியிட்டனர். பிறரோ, தங்கள் மணவாட்டிகளை பலியிட்டனர். ஒருவருக்கொருவர், துதியும், பணிவுமாய் இருந்தனர்;

சிலர் புருஷரோடு சயனித்தனர்; சிலர் [படுகொலையில்] ஈடுபட்டனர்; சிலர் எண்ணிறந்த பாவங்களையும், நீதியற்ற செய்லகளையும் செய்தனர். பலிபீடத்திற்கு [முன்] நின்ற புருஷன் உமது நாமத்தை அழைத்தனர். [39] அவர்களது செயல்கள் எல்லாவற்றிலும் குறைபாடு இருந்தாலும், அவர்களது பலி முழுமையாக இருந்தது.

துணைக்குறிப்புகள்: References :

Barbēlō refers to the first emanation of God in several forms of Gnostic cosmogony. Barbēlō is often depicted as a supreme female principle, the single passive antecedent of creation in its manifoldness. This figure is also variously referred to as 'Mother-Father' (hinting at her apparent androgyny), 'First Human Being', 'The Triple Androgynous Name', or 'Eternal Aeon'. So prominent was her place amongst some Gnostics that some schools were designated as *Barbeliotae*, Barbēlō worshippers or Barbēlōgnostics.